மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண்.109/2023 நாள்– 01.08.2024

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. K.மாரிராஜா, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– பாலமுருகன்(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) வாதி குடும்ப கொடி வழி ஜாபிதா – அசல் – வா.சா.ஆ.1

2) 05.03.2013 – 1 முதல் 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தின் தென்புறத்தை பொறுத்து எழுதி கொடுத்த கிரைய ஆவண எண்.2334/2013– சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.2

3) 04.09.2013 – 4ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தின் தென்புறத்தை பொறுத்து எழுதி கொடுத்த கிரைய ஆவண எண்.7856/2013 – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.3

4) 18.09.2019 – 2ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தின் வடபுறத்தை பொறுத்து எழுதி கொடுத்த கிரைய ஆவண எண்.5601/2019 – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.4

5) 24.08.2022 – 5ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தினை பொறுத்து எழுதி கொடுத்த கிரைய ஆவண எண்.8793/2022 – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.5

6) பட்டா எண்.1366 – கணினி நகல் – வா.சா.ஆ.6

7) திரு.எல்லப்பன் இறப்பு சான்றிதழ் – ஒளி நகல் – வா.சா.ஆ.7

8) வாரிசு சான்றிதழ் – ஒளி நகல் – வா.சா.ஆ.8

9) வில்லங்க சான்றிதழ் – கணினி நகல் – வா.சா.ஆ.9

(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)